செ.வெ.எண்: 69 நாள்: 30.10.2021

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நியாயவிலைக்கடைகளின் வேலை நேரம் அதிகரிப்பு

தீபாவளி பண்டிகையையொட்டி வரும் நவம்பர் 1ஆம் தேதி முதல் 3ஆம் தேதி வரை காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை நியாயவிலைக்கடைகளை திறந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருட்களை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடைகளும் நவம்பர் 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் காலை 8 மணி முதல் இரவு 7 வரை தொடர்ந்து செயல்படும். இந்நாட்களில் தீபாவளிக்கு முன்னதாக பொருட்கள் வாங்க விரும்புவோர் அனைவரும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் தொடர்புடைய நியாயவிலைக்கடைகளுக்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், தீபாவளிக்கு முன்னதாக பொருட்கள் வாங்காதவர்களுக்கு வழக்கம்போல் பண்டிகை காலம் முடிந்து 07-11-2021 ஞாயிற்றுகிழமை முதல் பொருட்களை தொடர்புடைய நியாயவிலைக்கடையில் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**